# இலங்கை இஸ்ரேல் தொடர்பை ஆட்சேபித்து இலங்கை குழு வரவை ஈரான் ரத்துச் செய்தது

Registered as a Newspaper in Sri Lanka விலை ரூபா ஒன்று

ஈழமுரசு

முரசு 8 14-11-85 வியாழக்கிழமை (ஐப்பசி 29 நவம்பர் 30) முழக்கம் 279

இலங்கை அரசாங்கம் இஸ்ரேலுடன் மீண்டும் ஆரம்பித்திருக்கும் நட்புறவுக்கு ஆட்சேபனை தெரிவிக்கும் நடவடிக்கையாக இவ்வாரம் ஈரானுக்குச் செல்லவிருந்த இலங்கை அரசின் தூதுக்குழுவின் விஜயத்தை ஈரான் அரசு கடைசி நிமிடத்தில் ரத்துச் செய்துள்ளது. இலங்கைத் தூதுக்குழு இரண்டு தினங்களுக்கு முன்னர் ஈரானுக்குச் செல்லவிருந்தது. வெளிவிவகார பிரதி அமைச்சர் திரு. டிரோன் பெர்ணன்டோ, ஐக்கிய தேசியக் கட்சியின் அக்கிராசனர் திரு. ஹர்ஷா அபேவர்த்தன, ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் ஜனுப் ஹலிம் இஷாக் ஆகிய மூவரும் இக்குழுவில் இடம் பெற்றிருந்தனர், அண்மையில் காமன்வெல்த் மகாநாட்டிற்குச் சென்றிருந்த இலங்கை ஜனாதிபதி ஜெயவர்த்தன, இஸ்ரேல் பிரதமரை அங்கு சந்தித்து இரகஸியமாக நடத்திய பேச்சுவார்த்தையும் ஈரான் அரச வட்டாரங்களில் பெரும் அதிருப்தியை உண்டு பண்ணியுள்ளது. இதன் எதிரொலியாகவே இலங்கைத் தூதுக்குழு மேற்கொள்ளவிருந்த தனது நாட்டுக்கான விஜயத்தை ஈரான் ரத்துச் செய்ய நேர்ந்ததென்பதை கொழும்பிலுள்ள ஈரான் தூதரக வட்டாரங்கள் ஊர்ஜிதம் செய்துள்ளன. இது தொடர்பாக எந்தக் கருத்தையும் தெரிவிக்க இலங்கை அரசு வட்டாரங்கள் மறுத்துள்ளன

★ நிதி அமைச்சர் றெனி டி மெல்லின் ஒன்பதாவது பட்ஜட் பரிசுகள்

# ரயில், தபால் தந்திக் கட்டணம் சிகரட், சாராயவிலை அதிகரிப்பு

## தொலைபேசி கட்டணமும் உயர்த்தப்பட்டது பாதுகாப்புக்கு 619 கோடி ரூபா ஒதுக்கீடு

(ஜெயவர்த்தனபுர)

நிதி அமைச்சர் றெனி டி மெல்லினால் நேற்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட 1986ம் ஆண்டுக்கான பட்ஜட் யோசனைகளின்படி ரயில் கட்டணம், தபால் கட்டணம், தந்திச் சேவைக் கட்டணம் ஆகியன உயர்த்தபட்டுள்ளன. சிகரட் விலை ஐந்து சதத்தால் உயர்த்தப்பட்டுள்ளது. உள்ளூர் உற்பத்திச் சாராயத்தின் தீர்வை வரி அதிகரிக்கப்பட்டதன் மூலம் அதன் விலையும் அதிகரிக்கப்படுகின்றது. புதிய தொலைபேசி இணைப்பு உட்பட தொலைபேசிக்கட்டணங்களும் அதிகரிக்கப்பட்டுள்ளன,

தமது ஒன்பதாவது தொடர்ச்சியான பட்ஜட்டை நேற்றுச் சமர்ப்பித்த அமைச்சர் றெனி டி மெல், அதன்மீதான உரையை . நேற்றுக்காலை பத்து மணிக்கு ஆரம்பித்தார். பிற்பகல் 4.30 மணிக்குப் பின்னர் பொருட்களின் விலை அதிகரிப்புப் பற்றிய அறிவித்தல்கள் வெளியாகின.

ரயில் போக்குவரத்துக் கட்டணங்கள் முதலாம் வகுப்புக்கு முப்பது வீதத்தாலும், இரண்டாம் வகுப்புக்கு பதினைந்து

—6ஆம் பக்கம் பார்க்க

## விவசாயிகளுக்கு பென்ஷன்; வரி எல்லை 27000 ரூபா; நன்கொடை, பூதல்வரி ரத்து!

விவசாயிகளுக்கு பென்ஷன் வழங்குவதற்கான திட்டமொன்றும் நேற்று வரவு செலவுத்திட்டத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது, இதன்படி பதினெட்டுக்கும ஐம்பத்தொன்பதிற்கும் இடைப்பட்ட வயதினர் இதற்குத் தமது பங்களிப்பை வழங்கவேண்டும்.

இதற்காக எண்பத்தைந்து கோடி ரூபாவை அரசு தனது ஆரம்பப் பங்களிப்பாக ஒதுக்கியுள்ளது.

நெல்லிற்கான உத்தரவாதவிலை புசலுக்கு 62 ரூபா 50 சதத்திலிருந்து எழுபது ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. உப உண

—6ஆம் பக்கம் பார்க்க

## நாளை பூரண ஹர்த்தால்

நாளை நடைபெறும் ஹர்த்தாலின் போது சகல போக்குவரத்துச் சேவைகளும் நிறுத்தப்படுமென்றும், வர்த்தக நிலையங்கள் அனைத்தும் மூடப்பட்டிருக்குமென்றும், அத்தியாவசிய சேவைகள் தவிர்ந்த மற்றைய எந்த வேலைகளும் நடைபெறுதெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## அரிசி, மா, சீனியுடன் மூன்று கப்பல்கள் இங்குவந்துள்ளன

மூன்று கப்பல்கள் உணவுப் பொருட்களை ஏற்றிக்கொண்டு காங்கசன்துறை துறைமுகத்துக்கு வந்துள்ளன.

கடவத்த என்ற கப்பலில் சீனியும், றுகுணு என்ற கப்பலில் அரிசியும், பெந்தோட்ட என்ற கப்பலில் மாவும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

தற்போது வடபகுதியில் ஏற்பட்டுள்ள மழை காரணமாக எந்த விதமான உணவுப் பொருட்களுக்கும் தட்டுப்பாடு ஏற்படவில்லை என்றும், போதியளவு அரிசி, மா, சீனி கையி

—6 ஆம் பக்கம் பார்க்க

## பூஸாவிலிருந்து மட்டுநகர் இளைஞர்கள் ஐவர் விடுதலை

பூஸா ராணுவ தடுப்புமுகாமிலிருந்து மேலும் ஐந்து இளைஞர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் ஐவரும் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்தவர்களாவர். இவர்களில் ஒருவர் அட்டாளைச்சேனையைச் சேர்ந்த அப்துல்காதர் அபூதாகீர் என்ற முஸ்லிமாவார்.

விடுதலையான மற்றைய நால்வரும் உன்னிச்சையைச்

—6ஆம் பக்கம் பார்க்க

## கண்காணிப்புக்குழு நேற்று மட்டக்களப்பு சென்றது

(மட்டுநகர்)

யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுவினர் மட்டக்களப்புக்கு நேற்று விஜயம் மேற்கொண்டார்கள். பிரஜைகள் குழுவினர் இவர்களைச் சந்தித்து பல சம்பவங்களையும் எடுத்துக் கூறினர்.

அதேவேளையில் மட்டக்களப்பில் நேற்று இடம்பெற்ற கண்ணிவெடித் தாக்குதல் சம்பவம் ஒன்றில் நான்கு

...6ம் பக்கம் பார்க்க

## கல்குடாவில் கொள்ளை

கல்குடா வாடிவீட்டிலிருந்து பதினாலாயிரம் ரூபா றொக்கப்

...6ஆம் பக்கம் பார்க்க

## ஆனையிறவு தடை முகாமில் இருமொழி துண்டுப் பிரசுரம்

ஆனையிறவு தடைமுகாமுக்கு முன்பாக செல்லும் வாகனங்கள், மற்றும் பஸ்களில் செல்பவர்களுக்கு அங்குள்ளவர்களால் நேற்று முன்தினம் சில துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டனவாம்.

அதில் பெண்கள் குழந்தைகளை வாகனத்தில் இருக்கவிட்டே சோதனையிடுவதாகவும், உங்களுடைய சௌகரியத்தை மேற்கொண்டு தாம் இவ்வாறு நடந்துகொள்வதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆங்கிலத்திலும், தமிழிலும் அவைபிரசுரிக்கப்பட்டிருந்தன.

## மரணமானோர் தொகை 59

## தமிழ்நாட்டில் கடற்படை ராணுவம் அவசர அழைப்பு

(சென்னை)

சென்னையிலும் தமிழகத்தின் மற்றைய பகுதிகளிலும் கடந்த சில தினங்களாகப் பெய்து வரும் கடும் மழையால் ஏற்பட்டுள்ள வெள்ள நிவாரணப்பணிகளில் ஈடுபடுவதற்காக இராணுவமும் கடற்படையினரும் சேவைக்கு அழைக்கப்பட்டுள்ளார்கள்.

கடும் மழை காரணமாகவும் வெள்ளத்தினாலும் சுமார் மூன்று இலட்சத்திற்கு மேற்பட்டவர்கள் வீடிழந்திருப்பதாகவும், தாழ்வான பகுதிகளில் பெருமளவ வெள்ளம் தேங்கி நிற்பதாகவும் அறிவிக்

...6ஆம் பக்கம் பார்க்க

## திருமலை மாவட்டத்துக்குள் பத்திரிகையாளர், உல்லாசப் பயணிகள் செல்வதற்கு தடை!

(திருமலை)

திருமலை மாவட்டத்தில் தொடர்ந்தும் கலவரங்கள் இடம்பெற்று வருவதால் உல்லாசப் பயணிகளும், பத்திரிகையாளர்களும் அங்கு செல்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளதாக திருமலை மாவட்டத்தின் புதிய ராணுவ இணைப்பு அதிகாரியாகப் பதவியேற்றிருக்கும் விமானப்படை பிரிகேடியர் ஹர்ஷா குணரத்தின அறிவித்துள்ளார்.

திருமலைச் சம்பவங்கள் பற்றி பொறுப்பற்ற முறையில் வெளிநாட்டுப் பத்திரிகைகள் செய்திகளை வெளியிட்டால்

—6ஆம் பக்கம் பார்க்க

தமிழ்பேசும் மக்களின் அபிமானம் பெற்றது ஈழமுரசு

ஐயனார் கோவில் நூல்வெளியீட்டில் பேச்சு:

# எம் பண்பாட்டு நிலவளம் அழிக்கப்படினும் ஆலயவரலாற்று நூல்கள் நிலைத்துநிற்கும்

(இருபாலை)

கிட்டத்தட்ட இருநூறு ஆண்டுகளுக்கு முன் ஸ்தாபிக்கப்பட்ட பல கோவில்கள் இன்று கூட முன்னேற்றம் காணாமல், வரலாறுகள் புரியாமல் இருக்கின்றன. கோவில்களின் வரலாற்று நூல் வெளியீட்டு மூலம்தான் நாம் பல கடந்த கால விடயங்களையும் அறியக்கூடியதாய் இருக்கும்.

இவ்வாறு கடந்த அண்மையில் வண்ணார்பண்ணை வடமேற்கு ஸ்ரீ பூரணம்பா புட்கலா பாசமேத ஐயனார்கோவில் மண்டலாபிஷேகப் பூர்த்தி விழாவின் போது ஐயனார் கோவில் நூல் வரலாற்று வெளியீட்டு விழாவிற்கு தலைமை வகித்து உரையாற்றிய முன்னாள் நீதிபதி திரு. க. வை. நவரத்தினம் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில் சில கிராமவாசிகள் தமது குல தெய்வங்களின் பெயர்களைத் தங்கள் கிராமத்திற்கு சூட்டுகிறார்கள். அதே போல் இந்தக் கிராமத்தின் பெயரை நிலைநாட்டிய இக் கோயிலையும் நாம் பேணிப் பாதுகாக்க வேண்டும். திருத்தல வரலாறும் மகா கும்பாபிஷேக மலரும் வெளியிடுவது இன்றைய காலத்தில் மிகமிக அவசியமாகும். நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் ஆசியுரை வழங்கினார். நூலின் முதற்பிரதியை யாழ். பல்கலைக் கழக பதிவாளர் திரு. வே. க. சிவராசா பெற்றுக் கொண்டார்.

யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைக் கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன் நூல் வெளியீட்டுரை நிகழ்த்துகையில் வண்ணார்பண்ணை ஒரு கோயில் நகரமாக காட்சிதருகிறது எம்மைச் சுற்றியுள்ள எந்தப் பிரதேசத்தைப் பார்த்தாலும் திருக்கோயில்கள் உள்ளன. இதனால் நல்ல சமுதாயமாக வாழ்ந்து கொண்டிருக்கிறோம். தலைமுறையாக வளர்ந்து வரும் இளைஞர் சமுதாயம் ஆலயங்களின்பண்பாடு பற்றிய வரலாறுகளை வெளியிடுதல் அவசியமாகும். பல ஆலயங்களின் வரலாறுகளை எழுத்து மூலம் பதித்து வைக்காத குறை பெருங்குறையாகும் எனக் குறிப்பிட்டதோடு நூல் வெளியீட்டாசிரியரையும் பாராட்டிப் பேசினார்.

திரு. வேதநாதன் உரையாற்றுகையில் ஈழத் திருநாட்டைப் பொறுத்தவரையில் இன்று நாம் வாழுகின்ற சமுதாயம் மிகப் பயங்கரமானதாகும். இன்று என்ன நடக்கும் நாளை என்ன நடக்கும் என்று சொல்லமுடியாது. எமது பண்பாட்டு நிலவளங்கள் அழிக்கப்படலாம், ஆனாலும் எமது வரலாற்றுநூல்கள் என்றும் நின்று நிலைக்கும் என்றார்.

நூலாசிரியர் திரு. ப. கணேசலிங்கம், திரு. சிவராமலிங்கம் வித்துவான் திருமதி வசந்தா வைத்தியநாதன் ஆகியோரும் உரையாற்றினர். யாழ். இந்து இளைஞர் பேரவைஆணையாளர் தி. து. தவகோபால் நன்றியுரை நிகழ்த்தினார்.


முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திச்சபை

## கேள்வி விளம்பரம்

முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான பின்வரும் கடைகளை 01-01-1986 தொடக்கம் மூன்று வருட காலத்திற்கு வாடகைக்கு விடுவதற்கான கேள்விகள் என்னால் கோரப்படுகின்றன. இது சம்பந்தமான விபரங்கள் அடங்கிய அட்டவணையை முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திச் சபையிலும், அதன் எல்லா உப-அலுவலகங்களிலும் பெற்றுக் கொள்ளலாம். கேள்விப் படிவங்கள் 18-11-1985 தொடக்கம் 10-12-1985 நண்பகல் 12-00 மணிவரை உப-அலுவலகங்களில் வழங்கப்படும். கேள்விகள் 11-12-1985 மு. ப. 10-00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். அன்று பி. ப. 2-00 மணிக்கு கேள்விகள் எனது அலுவலகத்தில் திறக்கப்படும்.

கடைகளின் விபரம் :-

முள்ளியவளை சந்தைக் கடை இல.: 1, 2, 3.

புதுக்குடியிருப்பு சந்தைக் கடை இல.: 1, 2.

துணுக்காய், மல்லாவி சந்தைக் கடை இல.: 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10, 12.

குமுளமுனை சந்தைக் கடை இல.: 1, 2.

பாண்டியன்குளம் சந்தைக் கடை இல.: 1, 2.

க. பொன்னம்பலம்,
மாவட்டச் செயலாளரும்,
கேள்விச் சபை தலைவரும்.

மாவட்ட அபிவிருத்திச் சபை,
அபிவிருத்திச் செயலகம்,
முல்லைத்தீவு.
08-11-1985.


## நிவாரண வேலைகள்

(நீர்வேலி)

அண்மையில் பெய்த பலத்த மழையினால் அச்செழுப் பகுதியில் உள்ள கொலனித் திட்டம் மற்றும் தாழ்ந்த பகுதியில் வெள்ளம் உட்புகுந்ததால் சுமார் இருநூறு குடும்பங்கள் தங்கள் வீடுகளை இழந்து அச்செழு மெதடிஸ்த பாடசாலை சைவப்பிரகாச வித்தியாசாலை ஆகிய பாடசாலைகளில் தஞ்சம் புகுந்துள்ளன.

இதனால் இப்பாடசாலைகள் நடைபெற முடியாதுள்ளது. பொது மக்களும் அச்செழு வளர்மதி சனசமூக நிலையமும் இவர்களுக்கான உணவு, உடை போன்றவற்றை வழங்கி வருகின்றன.

இவர்களது வீடுகள் சிறிய குடிசைகளாகையால் முற்றாக இடிந்து வீழ்ந்து வெள்ளத்துள் மூழ்கிக் காணபடுகின்றன.




⌘ உடுப்பிட்டி ஆனந்தராஜா தம்பதியின் மகள் வித்தியா இன்று தனது ஆறாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

⌘ வேலணை மேற்கு யோகலிங்கம் மலர் தம்பதியின் மகள் பிரசன்னா இன்று தனது இரண்டாவது பிறந்தநாளை கொண்டாடுகிறார்.

⌘ கொடிகாமம் விமலராஜசிங்கம் - பத்மராணி தம்பதியின் மகன் விஜேஜன் இன்று முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

⌘ உடுவில் வடக்கு, தயாளசீலன்-றதிதேவி தம்பதியின் மகன் தனரூபன் மூன்றாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

⌘ யாழ். ஸ்ரான்லி வீதி, செல்வரத்தினம் இந்திராதேவி தம்பதியின் மகள் லிங்கேஸ்வரி இன்று ஐந்தாவது பிறந்த நாளை கொண்டாடுகிறார்.

⌘ தமிழ் நாடு கோயம்புத்தூர், அர்ச்சுணன் - விஜயலட்சுமி தம்பதியரின் மகன் தினேஸ் தனது இரண்டாவது பிறந்தநாளை இன்று கொண்டாடுகிறார்.

⌘ உடுப்பிட்டி நாவலடி பரசோதிலிங்கம் வசந்தா தம்பதியரின் மகள் யாழேந்திரன் முதலாவது பிறந்தநாளை கொண்டாடுகிறார்.

⌘ கிளிநொச்சி, பரவிப்பாஞ்சான் தங்கராஜா சகுந்தலாதேவி தம்பதியரின் மகள் சங்கீதா முதலாவது பிறந்தநாளை இன்று கொண்டாடுகிறார்.


### ஒத்திவைப்பு

மேற்படி நிலையக் கட்டட நிதிக்காக நாம் 12-11-1985 இல் மேடையேற்ற இருந்த நான்கு நாடகங்கள் மழை காரணமாக மேடையேற்ற முடியாமல் போனதற்கு வருந்துகின்றோம். புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

வள்ளி அம்மன் சனசமூக நிலையம், கோப்பாய்.

வரி விளம்பரம்

### தவறிவிட்டது

அந்தோனிமுத்து ஞானசீலன் என்பவரது அடையாள அட்டை பிரதான வீதி மக்கள் வங்கிக்கு முன்பாகத் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழமுரசுக் காரியாலயத்தில் ஒப்படைக்கவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

68226840V இலக்கங் கொண்ட எனது மகனார் தருமலிங்கம் சுபாகரன் நயினாதீவு என்பவரின் அடையாள அட்டை தவறிவிட்டது. இந்துக் கல்லூரியில் இருந்து சென்றபற்றிக்ஸ் கல்லூரிக்கு போகும் வழியில் தவறிவிட்டது இதனைக் கண்டெடுத்தவர்கள் தயவு செய்து பின்வரும் விலாசத்திற்கு அனுப்பிவைக்கவும்.
க. த. தருமலிங்கம் அதிபர்,
கணேச மகாவித்தியாலயம்
புங்குடுதீவு.

## BUILDING SUPERVISER WANTED

கொழும்பில் ஓர் தலைசிறந்த கட்டிடக் கலைஞர் நிறுவனத்திற்கு ஓர் அனுபவம் வாய்ந்த கட்டிட மேற்பார்வையாளர் தேவை.

அவர் கொழும்பு நகர மத்தியில் அமைந்துள்ள ஒரு வேலைத்தலத்தில் குறைந்தது ஒரு வருடத்திற்கு வேலைக்கு அமர்த்தப்படுவார்.

தகுதி, அனுபவம், வயது, எதிர்பார்க்கும் சம்பளம் முதலிய விபரங்களுடன் 20-11-1985 க்கு முன்பு கீழ் காணும் விலாசத்துக்கு விண்ணப்பிக்கவும்.

க. தியாகராசா,
உத்தரவு பெற்ற நில அளவையாளர்.

'யாழிகை'
கண்டி வீதி,
மிருசுவில்.


## ஓராண்டு பூர்த்தி அஞ்சலி

### செல்வன் சி. விக்னேஸ்வரன்

மலர்வு 6-4-1961



உதிர்வு 14-11-1984

தண்மதிபோல் வந்தாயே உன்னைக் கண்மணியாய் வளர்த்தோமே. மின்னல் எனவந்த விதியின் விளையாட்டால் உன்னை இழந்தோமே! ஓராண்டு சென்றாலும் தீராது. கண்ணீரால் எமது அஞ்சலி.

நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி,
14. 11. 85.

உன்பிரிவால் வாடும்
அப்பா - அம்மா - தங்கையர்
தம்பிமார்.


## தொழிற் பயிற்சி

★ COMPUTER PROGRAMMING
BASIC — COBOL

COBOL படிக்க விரும்புவோர் வேறு Computer Language படித்திருத்தல் வேண்டும்.

காலம்: 3 மாதம் கட்டணம்: ரூ. 1000/=

★ ரெலிவிஷன், வீடியோ டெக் றிப்பெயறிங் சகல இன றேடியோ, ரெலிவிஷன், வீடியோ டெக் திருத்தும்முறை பயிற்சியளிக்கப்படும்.

★ எலக்ரிக்கல் வயறிங் ★ வெல்டிங்

★ மோட்டர் றீவைன்டிங்

★ Diploma in Hotel Management

★ French, German Language

ஆகியன பயிற்சியளிக்கப்படும்.

வெளிநாடுகளில் வேலை செய்வதற்கு அல்லது மேல்படிப்பு படிக்க விரும்புவோருக்கு அரிய சந்தர்ப்பம்.

ஆரம்பம் 20-11-85

விபரங்களுக்கு:

JAFFNA TECHNICAL INSTITUTE

52/1, ஸ்ரான்லி வீதி, (றெயில்வே கடவையருகாமை) யாழ்ப்பாணம்.

141, கண்டி வீதி, (யூனியன் பேக்கறியருகாமை) சாவகச்சேரி.

பெற்றோல் செற்முன்வீதி, (விக்கினேஸ்வரா கல்லூரி வீதி) நெல்லியடி, கரவெட்டி.

# லைபீரிய சதிப்புரட்சி தோல்வி என அறிவிப்பு

## 17 மணி நேரம் சமர் நீடிப்பு!

(லண்டன்)

**லைபீரியாவில் நடத்தப்பட்ட திடீர் சதிப்புரட்சி, தனது படையினரால் முறியடிக்கப்பட்டுவிட்டதாகவும், நிலைமை முழுவதும் தனது கட்டுப்பாட்டுக்குள் இருப்பதாகவும் ஜெனரல் சாமுவல்டோ அறிவித்துள்ளார். முன்னர் வந்த செய்தி ஜெனரல் கியும்பா சதிப்புரட்சிமூலம் ஆட்சியைக் கைப்பற்றிவிட்டதாகத் தெரிவித்திருந்தது.**

கிளர்ச்சிக்காரர்களின் தலைவர்களைக் கைது செய்யுமாறு படையினரைத் தான் பணித்துள்ளதாகவும் ஜெனரல் டோ தெரிவித்தார்.

இரவு ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருப்பதாகவும் சர்வதேச விமான நிலையங்கள் சதிக்கிளர்ச்சிக்காரர்கள் தப்பிவிடாதவாறு உஷார்படுத்தப்பட்டிருப்பதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

ஜெனரல் டோவின் மாளிகை மீது தொடுக்கப்பட்ட தாக்குதல் பதினேழு மணித்தியாலங்கள் நிகழ்ந்து அதன் பின்பே சதிப்புரட்சி முறியடிக்கப்பட்டதாகவும் அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

தான் சதிப்புரட்சி மூலம் ஆட்சியைக் கைப்பற்றிவிட்டதாக முன்னர் அறிவித்திருந்த ஜெனரல் கியும்பா ஜெனரல் டாவின் அநீதி ஊழல் நடவடிக்கைகளை எதிர்த்தே புரட்சிநடத்தப் பட்டிருந்ததாகவும், கூறியிருந்தார்.

இது இவ்வாறிருக்க, தலைநகரின் சூழலில் தொடர்ந்தும் சண்டை நடைபெற்று வருவதாகவும் அறிவிக்கப்படுகிறது.

எனினும் இச்செய்தி ஊர்ஜிதம் செய்யப்படவில்லை.

லைபீரியா மேற்கு ஆபிரிக்க நாடு என்பது குறிப்பிடத்தக்கது.

## மகாராஷ்டிர பஸ் விபத்து எழுவர் பலி; பலர் காயம்

(பம்பாய்)

மகாராஷ்டிராவில் பம்பாய் அருகே நிகழ்ந்த கோர பஸ் விபத்து ஒன்றில் எழுவர் மடிந்ததாகவும் பதினேழு பேர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பெரும் பள்ளம் ஒன்றில் பஸ் வீழ்ந்ததாலேயே விபத்து சம்பவித்ததாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

முதலமைச்சர் திரு. சிவாஜிராவ் பட்டேல் நிலங்கேகர் உடன் மருத்துவமனைக்கு விரைந்து நிலைமையைப் பார்வையிட்டார்.

இறந்தோர், காயமடைந்தோர் குடும்பங்களுக்கு நஷ்ட ஈடு வழங்கப்பட்டது.

## தீவைப்பில் மக்கள் கூட்டம் பொலிஸ் சுட்டு நால்வர் பலி

(ஜொஹனஸ்பேக்)

தென்னாபிரிக்காவில் நிகழ்ந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் ஒருபெண்உடபட நால்வர் கொல்லப்பட்டுள்ளதாக நேற்றுத் தெரிவிக்கப்பட்டது.

மக்கள் கும்பலைக் கட்டுப்படுத்த முடியாது போனதாலேயே பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ய நேரிட்டது என்றும் மக்கள் கும்பல் தீவைப்பில் ஈடுபட்டுள்ளதாகவும் மேலும் தகவல் வெளியாகியுள்ளது.

## தமிழர்குழு நிலை ஜே.ஆரிடம் தூதர் திலகரத்ன விபரிப்பு

(சென்னை)

இலங்கை ஜனாதிபதி ஜெயவர்தனவை சந்தித்த பாரதத்துக்கான இலங்கைத் தூதர் பேர்னாட் திலகரத்ன, இலங்கைத்தமிழர் குழுக்களுக்கும், பாரத அரசின் தலைவர்களுக்கும் இடையே நடைபெற்ற புதுடில்லிச் சந்திப்பு விவரங்களை எடுத்துரைத்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

வெளியுறவுச் செயலாளர் ரமேஷ் பண்டாரியைச் சந்தித்த பின்பே அவர் கொழும்பு புறப்பட்டார்.

இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பான செயல்முறை, போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் செயற்பாடு பற்றிய தமிழர் குழுக்களின் நிலை குறித்தும் திலகரத்ன ஜெயவர்தனவிடம் விபரித்ததாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

**யாஸிர் அரபாத் அறிவிப்பு:**

## அதிருப்தியாளர் செயலுக்கு பொறுப்பேற்க முடியாது

(கெய்ரோ)

"அதிருப்தி கொண்ட பாலஸ்தீனியக் குழுக்களின் செயல்களுக்கு நாம் பொறுப்பேற்க முடியாது" என்று பாலஸ்தீனிய விடுதலை இயக்கத் தலைவர் யாஸிர் அரபாத் தெரிவித்துள்ளார்.

கெய்ரோ வார ஏடு ஒன்றிற்கு அளித்த பேட்டியொன்றிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

"இஸ்ரேலியரால் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளைச் சார்ந்த குற்றமற்றவர்கள் மீது நடத்தப்படும் தாக்குதல்கள் தம் கட்டுப்பாட்டிற்குள் இருக்கும் குழுக்களுக்குப் பொருந்தாது" என்றும் அவர் சொன்னார்.

## கடும் காற்றழுத்த மண்டலம் மகாபலிபுரத்தை கடந்தது

(சென்னை)

வங்காள விரிகுடாவில் நிலை கொண்ட காற்றழுத்த மண்டலம் மகாபலிபுரத்திற்கருகே கரையைக் கடந்து சென்றுவிட்டதாக நேற்று அறிவிக்கப்பட்டது.

முன்னதாகத் தமிழக புதுச்சேரி கடலோரப் பகுதியில் மணித்தியாலத்துக்கு ஐம்பது முதல் அறுபத்தைந்து கிலோ மீற்றர் வேகத்தில் காற்று வீசலாமென எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

சென்னையில் இருநூறு குடிசைப் பகுதிகளில் வாழ்ந்த ஐம்பதாயிரம் மக்கள் வீடிழந்து பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளதாக நேற்றுக் காலை தெரிவிக்கப்பட்டது.

சென்னை மாநகராட்சி சபை ஒரு இலட்சம் உணவுப் பொட்டலங்களை பாதிக்கப்பட்ட மக்களுக்கு விநியோகித்துள்ளது.

கடும் காற்று, மழையால் சென்னையில் மின் விநியோகம் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தது.

ஏழைகள் வீடிழந்ததாலும் சாலைகள் பாதிப்புற்றுள்ளதாலும் பத்துக் கோடி ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளதாகத் தமிழக அரசு தெரிவித்துள்ளது. மத்திய அரசின் உதவியும் கோரப்பட்டுள்ளது

இறந்தோர் தொகை நற்பத்தெட்டு என்று நேற்றுக் காலை மேலும் தகவல் வெளியானது.

## கூட்டுறவு கடன் வசூல் தீவிரம்

(சென்னை)

கூட்டுறவுக் கடனை வசூலிக்க தீவிரம் காட்டிப் பெறுமாறு மத்திய அரசு தமிழக அரசைக் கேட்டுக் கொண்டுள்ளதாக கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

### உங்களுடையதா?

நாவலர் வீதி, நீர்வளசபை முன்னல் தவறவிடப்பட்டிருந்த 4 திறப்புக்களைக் கொண்ட கோர்வை ஒன்று ஈழமுரசு காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் காரியாலய நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

★ ஜெனீவா உச்சிமாநாடு: ஜனாதிபதி றீகன் வற்புறுத்து

## ஆப்., அங்கோலா, நிக்கரகுவா பதற்றம் குறைய வேண்டும்

(வாஷிங்டன்)

**இம்மாதம் பத்தொன்பதாம், இருபதாம் திகதிகளில் ஜெனீவாவில் நடைபெறவுள்ள உச்சிமாநாடு கீழை, மேலைத் தேசங்களுக்கிடையிலான நம்பிக்கையின்மையை நீக்குவதையே முக்கிய நோக்கமாகக் கொண்டிருக்கவேண்டும் என்று அமெரிக்க ஜனாதிபதி திரு. றெனல்ட் றீகன் வாஷிங்டனில் தெரிவித்துள்ளார்.**

சோவியத் தலைவர் திரு. கொர்பசெவ்வுடன் தான் நடத்தவுள்ள இந்த உச்சிமாநாட்டின்போது உடன்பாடு ஏதும் உருவாகும் என்ற நம்பிக்கை தனக்கில்லை என்றும் திரு. றீகன் சொன்னார்.

இம்மாநாடு பரிவுணர்வுச்



சூழ்நிலை ஒன்றைத் தோற்றுவிக்கும் ஒன்றாகவே இருக்கும் என்றார் அவர்.

ஆப்கானிஸ்தான், அங்கோலா, நிக்கராகுவா பூசல்களைத் தணிக்கவும் கீழை, மேலைத் தேசங்களுக்கிடையிலான நம்பிக்கையின்மை நீங்கவும் இம்மாநாடு வழிவகுக்க வேண்டும் என்றும் கருத்து வெளியிட்டார்.

## ஆசிரியர் ஆவேசம்

[கோயம்புத்தூர்]

தமது கோரிக்கைகளை வற்புறுத்தி கோயம்புத்தூரில் மறியல் செய்ய முயன்ற முந்நூற்றுப் பத்தொன்பது ஆசிரியர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக நேற்றுத் தெரிவிக்கப்பட்டது.

சமீப நாட்களாகத் தமிழகத்தில் ஆசிரியர் கிளர்ச்சி தொடர்ந்துநிகழ்ந்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாண அபிவிருத்திச் சபையின்

**கேள்வி அறிவித்தல் - 1986**

**சந்தைகள், கடைகள், இறைச்சிக்கடைகள் முதலியன**

30-09-1985 ஆந் திகதி என்னல் விளம்பரப்படுத்தப்பட்ட கேள்வி விளம்பரத்தின் பிரகாரம் கிடைக்கப்பெற்று நிராகரிக்கப்பட்ட கேள்விகளுக்கும் கிடைக்கப்பெருத கேள்விகளுக்கும், சில புதிய கேள்விகளுக்கும் மீண்டும் கேள்விகள் அழைக்கப்படுகின்றன. கேள்விகள் பற்றிய விபரமும், நிபந்தனைகளும், கேள்விப் பத்திரங்களும் யாழ்ப்பாண அபிவிருத்திச் சபையின் அவ் அவ் உப-அலுவலகங்களில் 28-11-1985 ஆந் திகதி நண்பகல் 12-00 மணிவரை பெற்றுக் கொள்ளலாம். கேள்விப் பத்திரத்தின் மூலப் பிரதி யாழ்ப்பாணம் அபிவிருத்திச் சபை தலைமை அலுவலகத்திலும், இணைப் பிரதி உப-அலுவலகத்திலும் 29-11-1985 ஆந் திகதி நண்பகல் 12-00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்வி பற்றிய முழு விபரங்களையும் கேள்விப் பத்திரப் பிணை, கேள்விப் பத்திர கிரயம் ஆகிய விபரங்களையும் உப-அலுவலகங்களிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

மு. பஞ்சாலிங்கம்,
செயலாளர்,
யாழ்ப்பாணம் அபிவிருத்திச் சபை.

யாழ். அபிவிருத்திச் சபை அலுவலகம்,
செயலகம், யாழ்ப்பாணம்.
1985-11-12.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மலசல கூடம் அமைத்தல்**

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் மலசல கூடம் அமைப்பதற்கு தகுதிவாய்ந்த கட்டிட ஒப்பந்தக்காரரிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன. விண்ணப்பப்படிவங்கள், அளவுகள் மாதிரிப்படிவங்கள் போன்ற விபரங்களை, பல்கலைக்கழக நிதியாளரிடமிருந்து 20. 11. 85ம் திகதிக்கு முன்னர் பெற்றுக் கொள்ள முடியும். விபரங்களுக்கான, வேண்டுகோளுடன், ரூ. 100/-க்கான, தபாற்கட்டளை / காசுக்கட்டளை, அனுப்பப்படவேண்டும். கேள்விகள் விண்ணப்பிப்பதற்கான, முடிவுதிகதி 02. 12. 85 முற்பகல் 10.00 மணியாகும் விண்ணப்பக்கடித உறையின், இடதுபுற மேல் மூலையில் UJ/F/SK/07/02/12/85 என்ற இலக்கம் குறிக்கப்படவேண்டும்.

—பதிவாளர்

ஈழமுரசு

ரான்ஸ்'யூரே ட்ரவல்ஸ்
இல. 6, நவீன சந்தை, மேல்மாடி.
வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கான
பயண ஒழுங்குகள்!
ஓமான், அபுடாபி
உடன் தொடர்பு கொள்ளவும்
உரிமையாளர்: S. K. மகேந்திரராசா
ச. இரத்தினவடிவேல்
தும்பளை,
பருத்தித்துறை.
தொலைபேசி: 23831

தருமபுரத்தில் நேற்று ஹர்த்தாலும் மறியலும்:

# விசாரணைக்காக கூட்டிச்சென்ற நால்வரில் ஒருவர் மரணம்; மற்றொருவர் ஆபத்தான நிலை

(பரந்தன்)

களவு ஒன்று சம்பந்தமாக, விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்ட நால்வரில் ஒருவர் பிணமாக வீட்டில் ஒப்படைக்கப்பட்டார். இன்னுமொருவர் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் இச்சம்பவம் தருமபுரம் பகுதியில் இடம்பெற்றது.

இதனைத் தொடர்ந்து தருமபுரம் பகுதி முழுவதும் நேற்று நடைபெற்ற ஹர்த்தாலிலும், மறியல் போராட்டத்திலும் அப்பகுதி மக்கள் பெருந்திரளாகக் கலந்து கொண்டனர். இப்பகுதிக் கடைகள் அனைத்தும் மூடப்பட்டிருந்தன. விசுவமடுவிலிருந்து கிளிநொச்சி வரை சேவையிலீடுபடும் தட்டிவான்கள் அனைத்தும் சேவையிலீடுபடவில்லை.

இச்சம்பவத்துடன் சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராகவே இப்போராட்டம் நடைபெற்றது. நண்பகல் நடைபெற்ற ஊர்வலத்தின் போது மாட்டுவண்டில் ஒன்றில் ஒலிபெருக்கி கட்டப்பட்டு குறிப்பிட்ட சம்பந்தப்பட்டவர்களை வெளியேறுமாறு கோஷங்கள் எழுப்பப்பட்டன.

தருமபுரத்தைச் சேர்ந்த நால்வரை சில தினங்களுக்கு முன்னர் களவு சம்பந்தமாக விசாரணைக்காக அழைத்துச் சென்றதாகவும், பின்னர் நேற்று முன்தினமிரவு அவர்களில் ஒருவரது சடலத்தை வீட்டுக்கு கொடுத்ததாகவும் அறியப்படுகிறது. இறந்தவர் 52 வயது நிரம்பியவர் எனவும், ஆறு பிள்ளைகளின் தந்தை எனவும், நீண்ட காலமாக ஆட்டு வியாபாரம் செய்து வந்ததாகவும் தெரிகிறது. இன்னுமொருவர் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## 4 மீனவர் பலி 200 பேர் மறைவு

நாட்டின் மேற்கு, தெற்குப் பகுதிகளில் ஆழ்கடலில் மீன் பிடிக்கச் சென்ற மீனவர்களில் நான்கு பேர் கடுங் காற்றினாலும் மழையினாலும் மரணமானதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் ஐம்பத்தியொரு படகுகளில் சென்ற சுமார் இருநூறு மீனவர்களைப் பற்றிய தகவல்கள் அறிய முடியாமலுள்ளது. இப்பகுதியிலுள்ள சகல கப்பல்களுக்கும் இம் மீனவர்கள் காணாமற் போனது பற்றிய தகவல் அறிவிக்கப்பட்டுள்ளது.

### பூஸாவிலிருந்து ...

சேர்ந்த வீ. சண்முகநாதன், திருகோவிலைச் சேர்ந்த வி. பரமநாதன், ஆரையம்பதியைச் சேர்ந்த எஸ். கணேசமூர்த்தி, மட்டுநகரைச் சேர்ந்த தி. ரவிச்சந்திரன் என்று மட்டுநகர் அரசாங்க அதிபருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

### கண்காணிப்புக்குழு

பொலிஸார் காயமடைந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பொலிஸார் ஜீப்பில் ரோந்து சென்று கொண்டிருந்த போதே இக் கண்ணிவெடித் தாக்குதல் இடம்பெற்றது.

கலமுனையில் பொறியியலாளர் ஒருவர் நேற்று முன்தினம் இரவு கடத்தப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## ஞாயிறன்று அஞ்சலிக் கூட்டம்

மறைந்த கூட்டணி எம்.பிக்களான அமரர்கள் வீ. தர்மலிங்கம், எம். ஆலாலசுந்தரம் ஆகியோரின் அஞ்சலிக் கூட்டம் எதிர்வரும் 17ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அராலி ஆகாயக்குளம் விநாயகர் ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது.

கடந்த ஞாயிறு இங்கு நடைபெறவிருந்த இக்கூட்டம் காலநிலை சீராக இல்லாததால் ஒத்தி வைக்கப்பட்டது.

### ரயில், தபால்...

வீதத்தாலும், மூன்றும் வகுப்புக்கு எட்டு வீதத்தாலும், பருவகாலச் சீட்டுக்கான கட்டணம் எட்டு வீதத்தாலும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

உள்ளூர் தபால்களுக்கான முத்திரைக் கட்டணம் அறுபது சதத்திலிருந்து எழுபத்தைந்து சதமாகவும், உள்ளூர் தபாலட்டைக்கான கட்டணம் முப்பத்தைந்து சதத்திலிருந்து ஐம்பது சதமாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது. விமானத் தபால் கட்டணங்களும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

தந்திக் கட்டணம் முதல் பதினைந்து சொற்களுக்கும் ஒரு ரூபா ஐம்பது சதமாகவும், மேலதிக ஒவ்வொரு சொற்களுக்கும் இருபத்தைந்து சதமாகவும் இருக்கும்.

புதிய தொலைபேசி இணைப்பிற்கான கட்டணம் ஏழாயிரம் ரூபாவிலிருந்து ஏழாயிரத்து ஐநூறு ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. தொலைபேசி கட்டணங்களும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

சிகரட் ஒன்றின் விலை ஐந்து சதத்தாலும், பீடியின் விலை ஒரு சதத்தாலும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

தென்னஞ் சாராயத்திற்கான மதுவரித் தீர்வை வீற்றரொன்றிற்கு 61 ரூபாவிலிருந்து 71 ரூபாவாகவும், கருப்பஞ்சாராயத்தின் தீர்வை ரூபா 55 40 சதத்திலிருந்து ரூபா 65 40 சதமாகவும், உள்நாட்டில் தயாரிக்கப்படும் வெளிநாட்டுச் சாராயத்தின் தீர்வை 73 ரூபாவிலிருந்து 80 ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

அமைச்சர் புதிய யோசனைகளைச் சமர்ப்பித்து உரையாற்றுகையில் நாட்டில் வன்செயல்கள் தொடர்வதால் பாதுகாப்புக்கு அதிகளவான தொகை ஒதுக்கவேண்டிய நிலை இருப்பதாகவும் 1978ஆம் ஆண்டில் 56 கோடி ரூபா மட்டுமே பாதுகாப்பிற்காக ஒதுக்கப்பட்டதாகவும் இவ்வாண்டு 619 கோடி 60 இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

## சிகரட் நேற்று இரண்டு ரூபா

பட்ஜட்டில் சிகரட்டுக்கு விலை அதிகரிக்கலாம் என்பதால் நேற்றும், நேற்று முன்தினமும் வடக்கின் பல இடங்களில் சிகரட்டுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

சில இடங்களில் இரண்டு ரூபாவுக்கும் சிகரட் விற்கப்பட்டதாம்.

### அரிசி, சீனி...

ருப்பில் இருப்பதாகவும் உணவுத் திணைக்கள உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை வடபகுதி விவசாயிகளுக்கான யூரியா, ரீ.டீ.எம், பீ மிக்ஸர் ஆகிய உரவகைகளை ஏற்றிக்கொண்டும் ஒரு கப்பல் இங்கு வந்துள்ளது.

### விவசாயிகளுக்கு....

வுப் பொருட்களுக்கான உத்தரவாத விலையும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

தனியார் வருமான வரி விதிப்பு எல்லை வருடம் இருபத்திநாலாயிரம் ரூபாவிலிருந்து இருபத்தேழாயிரம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. பூதல் வரி, நன்கொடை வரி ஆகியன நீக்கப்பட்டுள்ளது.

### கல்குடாவில் —

பணமும் வேறு பல பொருட்களும ஆயுதங்களுடன் சென்ற இனந்தெரியாதவர்களால் கொள்ளை அடிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நயினாதீவு ஆஸ்பத்திரியில்

## மண்ணெண்ணெய் பிரச்சினை நோயாளரை வாட்டுகிறது

(நயினாதீவு)

நயினாதீவு வைத்திய சாலையில் மண்ணெண்ணெய்த் தட்டுப்பாடு காரணமாக இரவில் வெளிச்ச வசதியும் மருந்துகளைப் பேணிப் பாதுகாப்பதற்கான குளிர்சாதன வசதியும் இல்லாமையால் சிகிச்சைக்குச் செல்லும் நோயாளர்களும் வார்ட்டுகளில் தங்கிச் சிகிச்சைபெறும் நோயாளர்களும் பெரும் கஷ்டத்துக்குள்ளாகியுள்ளனர்.

இதன் காரணமாக மேற்படி வைத்தியசாலை நிருவாகம் பொதுமக்களிடம் மண்ணெண்ணெய் தந்துதவுமாறு அவசர வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளது. சுகாதாரத் திணைக்களத்தினர் மண்ணெண்ணெய்க்குரிய கட்டுப்பாட்டு விலையையே தற்போது வழங்கி வருகின்றனர். ஆனால் தற்போது ப. நோ. கூ. சங்கங்களில் மண்ணெண்ணெய் இல்லாமையால் கட்டுப்பாட்டு விலைக்கு வெளிச் சந்தையில் மண்ணெண்ணெயைப் பெற முடியாதிருப்பதாலேயே இந்நிலை ஏற்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட சுகாதாரத் திணைக் களத்தினர் விசேட கொடுப்பனவு ஒன்றைச் செய்து இக்குறைப்பாட்டைத் தீர்த்து வைப்பார்கள் என நயினாதீவு மக்களும் வைத்தியசாலை நிருவாகமும் எதிர்பார்க்கின்றனர்.

தோட்டத்தில்

## இரண்டரை லட்சம் ரூபா கொள்ளை

றக்குவானையில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவத்தில் சம்பந்தப்பட்டவர்களைக் கண்டுபிடிப்பதற்கான தகவல்களைக் கொடுப்பவர்களுக்கு ஐம்பதாயிரம் ரூபா சன்மானம் கொடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது,

கடந்த எட்டாம் திகதி இங்குள்ள அரச தோட்டக்கம்பனி தொழிலாளர்களுக்கு சம்பளம் கொடுப்பதற்காகக் கொண்டு வரப்பட்ட 2,56 000 ரூபா பணம் இனந்தெரியாத பன்னிரெண்டு இளைஞர்களால் துப்பாக்கி முனையில் கொள்ளையிடப்பட்டது.

கொள்ளையில் ஈடுபட்ட இளைஞர்கள் இருபதுக்கும் இருபத்தைந்து வயதுக்கும் இடைப்பட்ட வயதினர் என அடையாளம் காணப்பட்டுள்ளது.

### பத்திரிகையாளர்....

மோசமான நிலை உருவாகும் என்பதாலேயே இத்தடை விதிக்கப்பட்டுள்ளதாக அவர் விளக்கினார்.

சில பத்திரிகையாளர்கள் உல்லாசப் பிரயாணிகள் போன்று உள்ளே வர முனைவதாலேயே உல்லாசப் பயணிகள் வருகைக்கும் தடை விதிக்க நேர்ந்ததாகவும் அவர் மேலும் கூறினார்.

ஆனால் எந்தப் பத்திரிகையாவது தவறான செய்தி வெளியிட்டமைக்கான ஒரு செய்தியைக் கூட திருமலை அரசாங்க அதிபர் திரு, கமிலஸ் பெர்னாண்டோவினால் காட்ட முடியாதது இங்கு குறிப்பிடத்தக்கது.

### தமிழ்நாட்டில்—

கப்பட்டுள்ளது.

இதே வேளையில் இம் மழை காரணமாக மரணமானவர்களின் எண்ணிக்கை ஐம்பத்தி ஒன்பதாக அதிகரித்துள்ளது.

## அலுமினிய தொழிற்சாலையில் கொள்ளை

(வேலணை)

ஊர்காவற்றுறை — யாழ்ப்பாண வீதியில இயங்கும் தனியார் கம்பனிக்குச் சொந்தமான அல்லைப்பிட்டி விமல் அலுமினிய தொழிற்சாலையினுள் ஆயுதபாணிகளாக உட்புகுந்த கொள்ளையர் கோஷ்டியொன்று பல இலட்சக்கணக்கான பெறுமதி வாய்ந்த இயந்திரங்கள், மின்சாரப் பொருட்கள், மற்றும் அலுமினிய உற்பத்திப் பொருட்கள், அலுமினிய கட்டிகள் ஆகிய பல பொருட்களை கொள்ளையடித்து சென்றுள்ளது.

இத்தொழிற்சாலை தனிப்பட்ட ஒருவருக்கு சொந்தமானதல்லவென்றும், வடமாகாணத்தில் இத்தொழிற்சாலை ஒரு முன்னோடித் தொழில் நிறுவனமென்றும் இதன் இயக்குநர் சபையினர் தெரிவித்துள்ளனர். இத்தொழிற்சாலைக் கொள்ளையினால் இங்கு வேலை பார்க்கும் ஊழியர்கள் வேலை இழக்க வேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்பட்டுள்ளதாம்.

## ரயில் சேவை வழமைபோல

நேற்று முன்தினம் இடம்பெற்ற கொள்ளை முயற்சிகளினால் வடபகுதி ரயில்சேவைகள் எதுவித பாதிப்பும் அடையவில்லை, என அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று யாழ் - தேவியும், இன்ரர்சிற்றியும் வழமைபோல சேவையிலீடுபட்டன.

## திரும்பினர்

[அரியாலை]

நாயன்மார்கட்டு இராமேஸ்வரி வீதியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு அரியாலை ஸ்ரீ கலைமகள் சனசமூக நிலைய மண்டபத்தில் தங்கி இருந்த ஐம்பதுக்கு மேற்பட்டோர் தத்தம் வீடுகளுக்கு நேற்றுத் திரும்பிச் சென்றார்கள். இவர்களுக்குச் சங்கிலியன் புனர்வாழ்வுக் கழகமும், இப்பகுதி இளைஞர்களும் உணவு உட்பட அத்தியாவசியப் பொருட்கள் கொடுத்து உதவினார்கள்.

சாவகச்சேரி இந்துக்கல்லூரி
பழைய மாணவர் சங்க
விசேட பொதுக் கூட்டம்

எதிர் வரும் 16-11-85 சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு கல்லூரி பிரதான மண்டபத்தில் நடைபெற விருந்த மேறபடி கூட்டம் ஆண்டு இறுதிப் பரீட்சை காரணமாக பிற்போடப்பட்டுள்ளது என்பதை அறியத் தருகிறேன்.

இந்துக்கல்லூரி,
சாவகச்சேரி.

கே. மகேஸ்வரன்
அதிபர்.

'ஈழமுரசு' சாயிபாபா அட்வர்டைசிங் அசோஸியேற்ஸ் ஸ்தாபனத்தாரால் 37, கண்டி வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகப் பகுதியில் 14-11-1985 வியாழக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது. தொலைபேசி: 23336